DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. MCOP No. 8/2020

Respondent side witness for R.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. வைரமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.08.2025.**

முதல்விசாரணை:–

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அது என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது.

குறுக்குவிசாரணை (மனுதாரர்தரப்பில்)

நிரூபணவாக்குமூலத்தில் இறந்துபோன நபர் சாலை விதிகளை மதிக்காமல் ரோட்டை திடீரென்று கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு இறந்த நபர் காரணமில்லை என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் ஓட்டுநர் விடுவிக்கப்பட்டார் என்று காட்டுவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர்கள் எல்லோரும் இறந்துபோனவரின் வருமானத்தை நம்பித்தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் எங்கள் நிறுவனத்தை பொறுத்து 3ம் தரப்பினர் என்றால் சரிதான். 3ம் தரப்பினருக்கு இழப்பீடு வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றால் விதிகளுக்குட்பட்டு வழங்க கடமைப்பட்டுள்ளோம். விபத்து 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும்தான் ஏற்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. மனுதாக்கல் செய்வதற்கு கால வரையறை கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் குற்ற வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும் எங்கள் நிறுவனம்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க

வேண்டும் என்ற கடமையிலிருந்து தப்பிப்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.